மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்பற்றி பரிசீலிக்கத் தான் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாநாடு கூட்ட யோசனை செய்து கொண்டிருக்கிறார் என்று மூன்றும் முறையாகச் சொல்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், கைத்தறித் தொழில் பரம்பரை யாக ஒரு சில சமுதாயத்தினரால் சொந்தமாக செய்து கொண்டு வருகிற ஒரு தொழில். தற்போது வேலை இல்லாதவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும் நேரத்தில், வேலை செய்தவர் களுக்கு குறைந்த பட்சம் இவ்வளவு கூலி கொடுக்கப்படும் என்ற உறுதியாவது ஏற்படும்படி செய்வது ஒரு சாதாரண நியதியாகும். இந்த நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்கிறோம். இந்தக் கோரிக்கையை அரசாங்கம் வருங்காலத்திலாவது பரிசீலித்து நம் மாநிலத்தில் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறைந்த பட்ச சம்பளம் வேண்டுமென்பதற்கு ஆதாரமாக இது ஒரு வாதம்.

நூற்பு ஆலைகள்

* 369 வின—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளை அரசுடமையாக்குவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த கூட்டுறவு ஆலைகளும் பொதுத்துறையைச் சார்ந்தவைகள்தானே. இந்தக் கூட்டுறவு ஆலைகள் தமிழகத்தில் மொத்தம் எத்தனை இருக் கின்றன ? எல்லாம் லாபகரமாக நடக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நூற்பு ஆலைகளைப் பற்றிய பொதுவான கேள்வி. கூட்டுறவு நூற்பு ஆலைகளைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நூற்பு ஆலைகளை அரசுடமை ஆக்குகிற எண்ணம் இல்லை என்று சொன்னார்கள். இருக்கின்ற ஆலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்று கண் காணிப்பதற்கும், ஆலைகள் மூடப்படுவதற்கு முன்னாலே அரசு மேற் கொள்வதற்கும், அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலைகள் மூடப்படுவதற்கு முன்னாலே, அவை எப்போது மூடப்படும் என்று ஊகிக்க முடியாது. ஆனால் மூடப்பட்ட ஆலைகளை பரிசீலித்து, சிக் மில்ஸ், மூடப்படுகிற தருவாயில் இருக்கும் ஆலைகளை பரிசீலித்து, நம்முடைய குழு அதற் கான சிபார்சுகளை செய்து இருக்கிறார்கள்.

1971 டிசம்பர் 14]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, கோவையில் மூடப்பட்ட ஆலைகள் அனைத்தையும் திறக்க என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்து இருக்கிறது ? எப்போது திறக்கப்படும் என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நேற்று இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னதாக நினைக்கிறேன். 6 ஆலைகளை திறப்பதாக பரிசீலனை செய்தார்கள். அதிலே சில ஆலைகளைப்பற்றி நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கிறது. சில ஆலைகளை திறக்க முடியாது என்ற நிலைமை இருக்கிறது. இரண்டு ஆலைகளை எடுத்து நடத்துவதற்கு நம்முடைய அரசாங்கம் முடிவு செய்து, மத்திய அரசுக்கு அதை எழுதிக் கேட்டு இருக்கிறோம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்போதைக்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என்றாலும், நாம் இப்போது பஸ்களைத் தேசியமயமாக்கிக்கொண்டு வருகிறோம். இதனால் ஏற்படும் லாபம் அரசாங்கத்திற்கே வந்து சேருகிறது. ஆகவே, இந்த ஆலைகளையும் தேசியமயமாக்கும் திட்டத்தை இப்போதைக்கு இல்லையென்றாலும், இனிமேலாவது ஏற்று நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் இப்போது அந்த ஜோஸ்யத்தில் இறங்கத் தயாராக இல்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு ஸ்பின்னிங் மில் ஏற்றுமதி செய்து ஏராளமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொது நூற்பாலைகள் பற்றிய கேள்வி. கூட்டுறவு மில்கள் பற்றியதல்ல. கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கமிட்டி சிபாரிசுகள் வந்திருக்கின்றன. மத்திய சர்க்காருக்கு கமிட்டியின் சிபாரிசுகள் வழங்கப்பட்டு 2½ மாதங்கள் ஆகின்றன. மத்திய சர்க்காருக்கு எழுதியிருப்பதாக அமைச்சர் சொன்னார். மத்திய சர்க்காரிடத்தில் பல விஷயங்களுக்கு, நேரில் சென்று, உட்கார்ந்து, நகர்த்துவதைப் போல், கோவை தொழிலாளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் முறையில், இந்த அரசு மத்திய சர்க்காரை நிர்ப்பந்தித்து, வெகு விரைவில் ஒரு முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நானும், முதலமைச்சரும் சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கண்டு, உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டபோது அவர்கள் அன்றைக்கே மாலை மூன்று மணிக்குள் உத்தரவு வரும் என்று சொன்னார்கள். இப்பொழுதுதான் அதைப் பற்றி கமிட்டி போட

ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்கிற தகவல் கிடைத்திருக்கிறது. இப்பொழுது புதிய சட்டம் வந்திருக்கிற காரணத்தால், அந்தக் கமிட்டி தேவையில்லாமலே, நாங்களே எடுக்க அனுமதி தரவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நூற்பாலைகளைத் தேசியமயமாக்குவது சம்பந்தமாக, தேசத்தில் நிதி வருவாய் உள்ள, வளர்ச்சியடைந்துள்ள தொழில்களைப் படிப்படியாகச் செய்ய இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா ? படிப்படி என்று சொல்லும்போது, வளர்ச்சியடைந்துள்ள நூற்பாலைகளும் வருகின்றன என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கொள்கைப் பிரச்சினைகள் பற்றி கேள்வி நேரத்தில் விவாதிக்கத் தயாரில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any proposal under this Government to appoint a technical expert—textile expert—to go into the question of the profitability or the workability of taking these closed mills and running by the Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி ஏற்கெனவே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. 5 ஆலைகளை எடுத்திருக்கிறோம். மேலும் சிலவற்றை எடுக்க மத்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி அமைக்கப்பட்டு, அவர்களும் ஆலோசனைகள் தந்திருக்கிறார்கள். சிலவற்றை எடுக்கலாம் என்றும், வேறு சிலவற்றை எடுக்க வேண்டாம் என்றும் அவர்கள் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. புதிதாக ஒரு குழு தேவையில்லை.

மாடல் வார்ப்படத் தொழிற்சாலை

* 370 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எத்தனை மாடல் பவுண்டரிகள் உள்ளன ?

(இ) வேலூரிலுள்ள மாடல் பவுண்டரியில் சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு என்ன ?

(உ) விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) நான்கு

(இ) 1970-71-ல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 10,25,000 (ரூபாய் பத்து லட்சத்து இருபத்தைந்தாயிரம்)

(உ) விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 11,28,000 (ரூபாய் பதினொரு லட்சத்து இருபத்தெட்டாயிரம்)